14.11.2024

**OS. 161 / 2023 வா. சா. 1. பாப்பாத்தி , க/பெ. ஆறுமுகம்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதி**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

எனது சொந்த ஊர் குளத்துப்பட்டி. பிரதிவாதி என்னுடைய உடன் பிறந்த சகோதரர். என்னுடன் பிறந்த மற்றொரு சகோதரர் ராஜேந்திரன். ராஜேந்திரன் தற்போது உயிருடன் உள்ளாரா என்று தெரியாது. சுமார் 40 ஆண்டுகளாக அவர் எங்கு உள்ளார் என்று தெரியாது. இது சம்பந்தமாக போலீசில் புகார் கொடுக்க வில்லை. தேடிப்பார்த்தோம் அவர் கிடைக்கவில்லை. என்னுடைய பெற்றோர்கள் தற்போது உயிருடன் இல்லை. எனக்கு திருமணம் ஆகி எனது கணவருடன் பூவாண்டிபட்டியில் வசித்து வருகிறேன்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
திருமயம்.